பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
03. 01. 2025 7 .15
வெள்ளிக்கிழமை காலை

தலைப்புச் செய்திகள்

1. பெங்களூரில் உள்ள தேசிய மனநல மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தின் பொன்விழாக் கொண்டாட்டங்களில், குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

2. பிரதமர் திரு நரேந்திர மோடி, தில்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

3. நாட்டில் கார்பன் வெளியேற்றம் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

4. அரசுமுறைப் பயணமாக இந்தியா வந்துள்ள மாலத்தீவு வெளியுறவு அமைச்சர் திரு அப்துல்லா கலீல், வெளியுறவு அமைச்சர் திரு ஜெய்சங்கருடன் இருதரப்பு உறவுகள் குறித்து இன்று பேச்சு நடத்துகிறார்.

5. இந்தூர் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan – Dev Javia** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

*---- இனி விரிவான செய்திகள் ----*

<<<<>>>>

பெங்களூருவில் உள்ள தேசிய மனநல மற்றும் நரம்பியல் அறிவியல் நிறுவனத்தின் பொன் விழாக் கொண்டாட்டங்களில் குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு இன்று பங்கேற்கிறார்.

இந்த நிகழ்ச்சியின்போது, அங்கு அமைக்கப்பட்டுள்ள புதிய மனநலப் பிரிவு வளாகம், ஆய்வக வளாகம், விடுதி கட்டடம் ஆகியவற்றை குடியரசுத்தலைவர் திறந்து வைக்கிறார்.

அதிநவீன 3-**D** எம்ஆர்ஐ ஸ்கேனர் மற்றும் டிஎஸ்ஏ இயந்திரத்தை அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.

வடக்கு கர்நாடகாவில் உள்ள பெலகாவியில் அதிநவீன புற்றுநோய் மருத்துவமனையையும் குடியரசுத்தலைவர் திறந்து வைக்கவுள்ளார்.

இந்த நிகழ்ச்சிகளில் கர்நாடக ஆளுநர் திரு தாவர்சந்த் கெலாட், மத்திய அமைச்சர்கள் திரு. ஜே.பி.நட்டா, திரு. பிரகலாத் ஜோஷி உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

<<<<>>>>

பிரதமர் திரு நரேந்திர மோடி, தில்லியில் பல்வேறு வளர்ச்சித் திட்டங்களை இன்று தொடங்கி வைப்பதுடன் புதிய திட்டப் பணிகளுக்கும் அடிக்கல் நாட்டுகிறார்.

தில்லி அசோக்விஹாரில் குடிசைப் பகுதி மறுவாழ்வு திட்டத்தின்கீழ் கட்டப்பட்டுள்ள ஆயிரத்து 675 அடுக்குமாடிக் குடியிருப்புகளை அவர் திறந்து வைக்கிறார்.

நவ்ரோஜி நகரில் 2 நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டங்களை பிரதமர் தொடங்கி வைக்கிறார்.

தில்லி துவாரகாவில் 300 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள சி.பி.எஸ்.சி-யின் ஒருங்கிணைந்த அலுவலக வளாகத்தையும் அவர் திறந்து வைக்க உள்ளார்.

தில்லி பல்கலைக்கழகத்தில் 600 கோடி ரூபாய் மதிப்பில் கட்டப்பட உள்ள நவீன வளாகங்களுக்கு திரு. நரேந்திர மோடி அடிக்கல் நாட்ட உள்ளார்.

<<<<>>>>

மத்திய ரயில்வே மற்றும் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சர் திரு அஸ்வினி வைஷ்ணவ் இன்று அசாமில் பல்வேறு நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

கோக்ராஜரில் 10 கிலோவாட் திறன் கொண்ட ஆகாஷ்வாணி பண்பலை டிரான்ஸ்மிட்டரை அவர் தொடங்கி வைக்கவுள்ளார்.

கோக்ராஜர் பண்பலை ஒலிபரப்பின் மூலம் சுற்றியுள்ள 70 கிலோ மீட்டர் பகுதிகளில் உள்ள 30 லட்சம் மக்கள் பயனடைவார்கள் என எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

தமது பயணத்தின் போது, குவஹாத்தி-நியூ லக்கிம்பூர் ஜன்சதாப்தி விரைவு ரயில், நியூ போங்கைகான்-குவஹாத்தி பயணிகள் ரயில் மற்றும் தின்சுகியா-நஹர்லாகுன் விரைவு ரயில் ஆகியவற்றை அமைச்சர் கொடியசைத்து தொடங்கி வைக்கவுள்ளார்.

குவஹாத்தியில் நடைபெறும் நிகழ்ச்சியில், தேசிய மின்னணு மற்றும் தகவல் தொழில்நுட்ப நிகர்நிலைப் பல்கலைக்கழக வளாகத்தை திரு அஸ்வினி வைஷ்ணவ் திறந்து வைக்கவுள்ளார்.

ஜாகிரோட்டில் உள்ள செமிகண்டக்டர் தொழிற்சாலையையும் அவர் பார்வையிட உள்ளார்.

<<<<>>>>

நாட்டில் கார்பன் வெளியேற்றம் பெருமளவு குறைந்துள்ளதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் திரு புபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

பருவநிலை மாற்றம் தொடர்பான ஐநா மாநாட்டில் இந்தியா சமர்ப்பித்த அறிக்கை குறித்து அவர் சமூக வலைதளத்தில் தமது கருத்தைப் பதிவு செய்துள்ளார்.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது 2020ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த பசுமைக்குடில் வாயு வெளியேற்றம் 7 புள்ளி ஒன்பது மூன்று சதவீதம் குறைந்துள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

2005 மற்றும் 2020-ம் ஆண்டுக்கு இடையில், மொத்த உள்நாட்டு உற்பத்தியில் இந்தியாவின் கார்பன் வெளியேற்றத்தின் தீவிரம் 36 சதவீதம் குறைந்துள்ளதாகவும் அவர் கூறியுள்ளார்.

நாட்டின் வனம் மற்றும் மரங்களின் பரப்பு தொடர்ந்து அதிகரித்து, தற்போது மொத்த பரப்பளவில் 25 புள்ளி ஒன்று ஏழு சதவீதமாக உள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

வளர்ச்சியை அதிகரிக்கும் அதேசமயம் சுற்றுச் சூழலைப் பாதுகாப்பதற்கான பிரதமர் திரு நரேந்திர மோடியின் உறுதியை இந்தப் புள்ளி விவரங்கள் பிரதிபலிப்பதாகவும் திரு பூபேந்தர் யாதவ் கூறியுள்ளார்.

<<<<>>>>

தலைநகர் தில்லியில் காற்று மாசை குறைக்கும் வகையில் போக்குவரத்து முறை மேம்படுத்தப்படும் என மத்திய சாலைப் போக்குவரத்துத் துறை அமைச்சர் திரு நிதின் கட்கரி கூறியுள்ளார்.

தில்லியில் 12 ஆயிரத்து 500 கோடி ரூபாய் மதிப்புள்ள புதிய போக்குவரத்துத் திட்டங்களை நேற்று அறிவித்தார்.

இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படுவதன் மூலம், மற்ற பகுதிகளில் இருந்து தில்லி நகருக்குள் வரும் வாகனங்கள் குறையும் என்றும், போக்குவரத்து நெரிசல் குறையும் என்றும் அவர் தெரிவித்தார்.

மின்சாரப் பேருந்துகளும், சிஎன்ஜி, எல்பிஜி போன்ற மாற்று எரிபொருள்களில் இயங்கும் வாகனங்களும் தில்லியில் அதிக அளவில் இயக்கப்படும் என அவர் கூறினார்.

அடுத்த 5 ஆண்டுகளில் தில்லியை காற்று மாசுபாட்டைக் குறைக்கும் வகையில் பல திட்டங்கள் செயல்பாட்டுக்கு வர உள்ளதாகவும் திரு நிதின் கட்கரி குறிப்பிட்டார்.

<<<<>>>>

ராஜஸ்தான் மாநிலம் அஜ்மீரில் உள்ள புகழ்பெற்ற தர்காவில் நடைபெறவுள்ள உருஸ் விழாவில் பயன்படுத்துவதற்கான மலர்ப் போர்வையை பிரதமர் திரு நரேந்திர மோடி புதுதில்லியில் நேற்று வழங்கினார்.

இந்த மலர்ப் போர்வையை மத்திய சிறுபான்மையினர் நலதத்துறை அமைச்சர் திரு கிரண் ரிஜிஜு நாளை அஜ்மீர் தர்கா நிர்வாகத்திடம் ஒப்படைக்கவுள்ளார்.

<<<<>>>>

மாலத்தீவு வெளியுறவுத் துறை அமைச்சர் அப்துல்லா கலீல் அரசு முறைப் பயணமாக நேற்று மாலை புதுதில்லி வந்தடைந்தார்.

இன்று அவர் வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கரை சந்தித்துப் பேசவுள்ளார்.

இருதரப்பு பொருளாதார ஒத்துழைப்பை வலுப்படுத்துவது குறித்தும் கடல் சார் ஒத்துழைப்பை மேமப்டுத்துவது குறித்தும் அவர்கள் ஆலோசனை நடத்தவுள்ளதாக வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் திரு ரன்தீர் ஜெய்ஸ்வால் கூறியுள்ளார்.

<<<<>>>>

நாட்டின் மின் தேவை முழுவதுமாகப் பூர்த்தி செய்யப்படுவதாக மத்திய மின்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

2014ஆம் ஆண்டில் 249 ஜிகாவாட்டாக இருந்த மின் உற்பத்தித் திறன் 2024-ம் ஆண்டில் 457 ஜிகாவாட்டாக அதிகரித்ததாக அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

நடப்பு நிதியாண்டில் இதுவரை இல்லாத அளவுக்கு 250 ஜிகாவாட் மின் தேவையை நாடு வெற்றிகரமாக பூர்த்தி செய்துள்ளதாகவும் அது கூறியுள்ளது.

2032-ம் ஆண்டுக்குள் 458 ஜிகாவாட் உச்ச மின் தேவையைப் பூர்த்தி செய்ய மத்திய மற்றும் மாநில மின் கட்டமைப்புகளுக்கான தேசிய மின் திட்டத்தை மத்திய அரசு இறுதி செய்துள்ளதாகவும் மின்துறை அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

மின்சார வாகனங்களளை ஊக்குவிக்கும் ஃபேம் திட்டத்தின் இரண்டாம் கட்டத்தின் கீழ் 15 லட்சத்துக்கும் மேற்பட்ட வாகனங்களுக்கு ஊக்கத்தொகை வழங்கப்பட்டுள்ளதாக கனரக தொழில் துறை அமைச்சகம் கூறியுள்ளது.

இதில் 14 லட்சம் இரு சக்கர வாகனங்களும், ஒரு லட்சத்து 59 ஆயிரம் மூன்று சக்கர வாகனங்களும் 22 ஆயிரம் நான்கு சக்கர மின்சார வாகனங்களும் அடங்கும் என அந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

பிஜேபி-யின் மாநிலத் தலைவர்கள் மற்றும் தேசிய கவுன்சில் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுப்பதற்கான தேர்தல் பொறுப்பாளர்களை அக்கட்சி நியமித்துள்ளது.

குஜராத்துக்கு மத்திய அமைச்சர் திரு பூபேந்திர யாதவும், கர்நாடகாவுக்கு மத்திய அமைச்சர் திரு சிவராஜ் சிங் சௌகானும் தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

மத்திய அமைச்சர் திரு பியூஷ் கோயல் உத்தரபிரதேசத்துக்கும், திரு மனோகர் லால் பீகாருக்கும், திரு தர்மேந்திர பிரதான் மத்திய பிரதேசத்துக்கும் தேர்தல் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிக்கிம் மாநில தேர்தல் பொறுப்பாளராக மத்திய அமைச்சர் திரு கிரண் ரிஜிஜுவை பிஜேபி நியமித்துள்ளது.

<<<<>>>>

ஒடிசாவில் மாநில அரசுப் பணிகளில் அடுத்த 5 ஆண்டுகளில் ஒரு லட்சத்து ஐம்பதாயிரம் பணி நியமனங்கள் மேற்கொள்ளப்படும் என்று அம்மாநில முதலமைச்சர் திரு மோகன் சரண் மாஜி கூறியுள்ளார்.

மாநில பணியாளர் தேர்வாணையத்தின் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொண்ட பின் அவர் இதனைத் தெரிவித்தார்.

மாநிலத்தில் அரசுப் பணிகளுக்கான தேர்வு முறை பாரபட்சமற்றதாகவும், விரைவாகவும் மேற்கொள்ளப்படும் என்றும் அவர் கூறினார்.

சுகாதாரம், வீட்டுவசதி, கல்வி, வேளாண் உள்ளிட்ட துறைகளில் உள்ள காலிப் பணியிடங்களை விரைந்து நிரப்ப முன்னுரிமை அளிக்கப்படும் என்றும் திரு மோகன் சரண் மஜி கூறினார்.

<<<<>>>>

நாட்டின் பல பகுததிகளில் கடும் குளிர் தொடர்ந்து நீடிக்கும் என வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

பீகாரின் சில பகுதிகள், வடகிழக்குப் பகுதிகள், ஹிமாச்சலப் பிரதேசம், மத்தியப் பிரதேசம் ஆகிய பகுதிகளில் அடுத்த சில நாட்களுக்கு இரவு மற்றும் காலை நேரங்களில் அடர்த்தியான மூடுபனி நிலவும் என அந்த மையம் கூறியுள்ளது.

நாட்டின் வடமேற்கு பகுதிகளில் அடுத்த 5 நாட்களில் குறைந்தபட்ச வெப்பநிலை படிப்படியாக 2 முதல் 3 டிகிரி செல்சியஸ் வரை உயரக் கூடும் என்றும் அந்த மையம் தெரிவித்துள்ளது.

அடுத்த 3 நாட்களில் நாட்டின் மத்திய மற்றும் கிழக்குப் பகுதிகளில் குறைந்தபட்ச வெப்பநிலையில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜம்மு காஷ்மீரில் பல பகுதிகளில் கடும் குளிர் நிலவுவதாக எமது செய்தியாளர் தெரவிக்கிறார்.

ஸ்ரீநகரில் குறைந்தபட்ச வெப்பநிலை மைனஸ் 4 புள்ளி நான்கு டிகிரி செல்சியஸாக பதிவானது. ஹிமாச்சல பிரதேசத்தின் பல பகுதிகளில் குறைந்த பட்ச வெப்பநிலை மைனஸ் 5 டிகிரிக்கும் கீழ் பதிவாகியுள்ளது.

<<<<>>>>

எல்லை தாண்டியதாக கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் 90 பேரை பங்களாதேஷும், பங்களாதேஷ் மீனவர்கள் 95 பேரை இந்தியாவும் விடுவித்துள்ளன.

விடுவிக்கப்பட்ட மீனவர்கள், இருநாடுகளின் கடலோரக் காவல் படை மூலம் வரும் ஞாயிற்றுக்கிழமை ஒப்படைக்கப்படுவார்கள் என்று வெளியுறவு அமைச்சகம் கூறியுள்ளது.

<<<<>>>>

ரயில்வே விளையாட்டு மேம்பாட்டு வாரியத்தின் மூலம் 29 விளையாட்டுகளில் 9 ஆயிரம் பேருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருவதாக ரயில்வே அமைச்சகம் தெரிவித்துள்ளது.

இதில் 18 தனிநபர் விளையாட்டுகளும், 11 குழு விளையாட்டுகளும் அடங்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாட்டில் விளையாட்டுகளை மேம்படுத்துவதில் இந்த வாரியமும் தற்போது முக்கிய பங்காற்றி வருவதாக அந்த அமைச்சகம் கூறியுள்ளது.

வேலைவாய்ப்பை உறுதி செய்து பயிற்சிகளை வழங்கும் பணியை ரயில்வே மேற்கொண்டுள்ளதாகவும், ரயில்வே துறையில் உள்ள மூவாயிரத்துக்கும் மேற்பட்ட வீரர்கள் தேசிய மற்றும் சர்வதேச அளவில் சிறப்பாக செயல்பட்டு வருவதாகவும் ரயில்வே தெரிவித்துள்ளது.

<<<<>>>>

இந்தூரில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் **Chirag Duhan – Dev Javia** இணை அரையிறுதிக்கு முன்னேறியுள்ளது.

நேற்று நடைபெற்ற ஆடவர் இரட்டையர் பிரிவு காலிறுதிப் போட்டியில் இந்த இணை, 6-3, 6-4 என்ற செட் கணக்கில் இந்தியாவின் சாய் கார்த்திக் - யுக்ரைனின் எரிக் இணையை வென்றது.

பரிக்ஷித் - சுரேஷ் இணையும், இஷாக் - ஆர்யன் இணையும் அரையிறுதிக்கு முன்னேறியுள்ளன.

<<<<>>>>

ஹாக்கி இந்தியா லீக் போட்டியில் உத்தரப்பிரதேச அணி - சூர்மா அணியை வென்றது.

ரவுர்கேலாவில் நடைபெற்ற இப்போட்டியில் உத்தரப்பிரதேச அணி, 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

இன்றைய ஆட்டத்தில் தமிழக அணி — கலிங்கா அணியை எதிர்கொள்கிறது.

ரவுர்கேலாவில் இப்போட்டி இரவு மணி 8.15க்கு தொடங்குகிறது.

<<<<>>>>

ஐ.எஸ்.எல். கால்பந்து போட்டியின் நேற்றைய ஆட்டத்தில் மோகன் பஹன் அணி - ஹைதராபாத் அணியை வென்றது.

கொல்கத்தாவில் நடைபெற்ற இப்போட்டியில் மோகன் பஹன் அணி 3-0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

குவஹாத்தியில் இன்று நடைபெறும் போட்டியில் ஒருங்கிணைந்த வடகிழக்கு அணி — முகமதன் அணியை எதிர்கொள்கிறது.

**<<<<The End>>>>**